DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | | **S.C.No. 230/2019** |
| Depositions of Witness for | | Prosecution Pw 7 |
| | | Defence |
| | | Court |
| Name | : | **திருமதி. அம்சமணி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of September 2025.

**( A7 died. Others Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேவதானப்பட்டியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம். ராஜபாண்டி (எ) ஜெகதீசன் எனது மகன் ஆவார்- எனது மகன் தேங்காய் வியாபாரம் செய்துவந்தார். நல்ல மலை என்பவர் பல்வேறு இடங்களில் தோட்டம், துறவுகள் வைத்துள்ளார் என்றும் அதில் தன்னை கணக்குப்பிள்ளையாக அமர்த்தியுள்ளார் என்றும் எனது மகன் என்னிடம் சொன்னார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், நல்லமலை எனது மகன் ஜெகதீசனை வேலை

விஷயமாக வெளியே அழைத்து சென்றார். வேலையை முடித்துவிட்டு 2 நாட்களில் வந்துவிடுவதாக சொல்லிவிட்டுப்போன எனது மகன் வீட்டிற்கு வரவில்லை.

2 நாட்கள் கழித்து எனது மருமகளுக்கு நல்லமலை திருநெல்வேலியிலிருந்து போன்செய்து, தன்னை வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார். திருநெல்வேலி மருத்துவமனைக்கு சென்று வெட்டுப்பட்டு கிடந்த நல்லமலையை பார்த்தோம். நல்லமலை, தன்னை வெட்டியவர்களிடமிருந்து தான் தப்பி வந்துவிட்டதாகவும், ஜெகதீசனை 10 பேர் கொண்ட கும்பல் ஒரு காரில் அழைத்து சென்றுவிட்டார்கள் என்றும், ஜெகதீசன் என்ன ஆனார் என்று எனக்கு தெரியாது என்று எங்களிடம் சொன்னார். அதன் பிறகு அந்த வாரம் வெள்ளிக்கிழமை அன்று என்னுடைய மகன் ஜெகதீசனை ஊத்துமலை பகுதியில் கொலையுண்டு கிடப்பதாக தகவல் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் நானும், எனது மருமகளும், உறவினர்களும் ஊத்துமலையில் எனது மகன் இறந்துகிடந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். நாங்கள் பார்த்தபோது, பனியன், டிரவுசருடன் வெட்டுப்பட்டு இறந்துகிடந்தார். அங்கிருந்து ஊத்துமலை மருத்துவமனைக்கு பிரேதத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். பிரேத பரிசோதனைக்கு பின்னர் எனது மகனின் உடலை எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். என்ன காரணத்திற்காக எனது மகனை வெட்டி கொலை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. யார் கொலை செய்தார்கள் என்ற விவரமும் எனக்குதெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>4, 9,10,11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது மகனை வேலை விஷயமாக நல்லமலை அழைத்து செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மருமகளுக்கு நல்லமலை திருநெல்வேலியிலிருந்து போன் செய்து, தன்னை வெட்டிவிட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மகனுக்கும் நல்லமலைக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**(மற்ற எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது)**

<u>மறுவிசாரணை இல்லை</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 230/2019**

Depositions of Witness for Prosecution Pw 8
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. தீபா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of September 2025.

**( A7 died. Others Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேவதானப்பட்டியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம். ராஜபாண்டி (எ) ஜெகதீசன் எனது கணவர் ஆவார்- அவர தேங்காய் வியாபாரம் செய்துவந்தார். ஊசிலம்பட்டியை சேர்ந்த நல்லமலை என்பவர் பல்வேறு இடங்களில் பல்வேறு இடங்களில் தோட்டம், துறவுகள் வைத்துள்ளார். அவரிடம் நாங்கள் தேங்காய்களை வாங்கி எனது கணவர் வியாபாரம் செய்வது வழக்கம். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நல்லமலை வெளியூர் செல்லும் நேரங்களில் எனது கணவரை டிரைவராக அழைத்து செல்வார். கடந்த 28.02.2016 ம் தேதி அன்று காலையில் 07.00 மணியளவில்

தேவதானப்பட்டியில் இருந்து கொடைக்கானலுக்கு வேலைவிஷயமாக நல்லமலை எனது கணவரை அழைத்து சென்றார். எனது கணவர் 28.02.2016 ம் தேதி காலை 10.00 மணியளவில் என்னிடம் செல்போனில் பேசினார். அதன் பின்னர் நாங்கள் அழைத்தபோதும் அவர் போன் எடுக்கவில்லை, அவரும் போன் செய்யவில்லை.

அதன் பிறகு 02.03.2016 ம் தேதி நல்லமலை எனக்கு போன் செய்து தான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வெட்டுப்பட்டு சிகிச்சையில் இருப்பதாகவும், உடனே உறவினர்களுடன் கிளம்பி வருமாறும் என்னிடம் சொன்னார். நானும், எனது மாமியார் மற்றும் உறவினர்களுடன் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என்ன ஆனது என்று அவரிடம் கேட்டபோது, கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு சுமார் 10 பேர் தன்னையும், ஜெகதீசனையும் தாக்கியதாகவும் தான் தப்பி வந்துவிட்டதாகவும் ஜெகதீசனுக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை என்றும் நல்லமலை சொன்னார். ஊத்துமலை காவல்நிலையத்தில் தான் புகார் கொடுத்துள்ளதாக நல்லமலை தெரிவித்தார். இந்நிலையில் ஊத்துமலை காவல்நிலையம் சென்று என்ன ஆனது என்று பார்க்கசொன்னார். காவல்நிலையத்தில் கேட்டபோது, எனது கணவரை பற்றி ஏதேனும் தகவல் கிடைத்தால் தெரிவிப்பதாக சொன்னார்கள். அதன் பிறகு நாங்கள் ஊருக்கு கிளம்பிவிட்டோம். மீண்டும் 2 – 3 நாட்கள் கழித்து ஊத்துமலை காவல்நிலையத்திற்கு நான் எனது உறவினர்களுடன் வந்தேன். ராஜபாளையம் அருகே வந்துகொண்டிருந்தபோது ஊத்துமலை காவல்நிலையத்திலிருந்து என்னை தொடர்பு கொண்டு, ஊத்துமலை பகுதியில் ஒரு பிரேதம் கிடப்பதாகவும், அதனை வந்துஅடையாளம் காட்டுமாறும் சொன்னார்கள். அதன் பிறகு நாங்கள் நேரே ஊத்துமலை காவல்நிலையம் சென்றோம். அங்குள்ள போலீசார் தெய்வசுந்தரப்பாண்டியன் என்ற நபர் நல்லமலைக்கு 7 லட்ச ரூபாய் பணம் கொடுத்திருந்தார் என்றும், அதற்கு பதிலாக பலகோடி ரூபாய் கருப்பு பணத்தை தருவதாக நல்லமலை சொன்னார் என்றும் ஆனால் நல்லமலை அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என்றும், இதன் தொடர்ச்சியாக தெய்வசுந்தரபாண்டியன், தட்டப்பாறையை சேர்ந்த வெள்ளத்துரை, வெள்ளத்துரையின் தம்பி கணேசன், திருநெல்வேலி தீயணைப்பு துறையை சேர்ந்த மாரியப்பன், மாரியப்பனுடன் வந்த மூவர், சுரண்டையை சேர்ந்த வெள்ளைத்துரை, சங்கரபாண்டியன் மகன் மாரியப்பன், மணிகண்டன் மகன் சபரிசெல்வன் ஆகியோர் சேர்ந்து 29.02.2016 ம் தேதி இரவு 11.40 மணியளவில் நல்லமலை சென்ற வாகனமான TN-59-AH-8679 Ford Fiesta வாகனத்தை

எனது கணவர் ஓட்டிசெல்கையில் எதிரிகள் பத்து பேரும் சேர்ந்து நல்லமலை மற்றும் எனது கணவரை ஊத்துமலையில் கிழக்குப்பக்கம் மலைப்பகுதியில் கட்டி வைத்திருந்தார்கள் என்றும், அப்போது கணபதி தேவர் என்பவர் கொடுத்த பணத்தை எங்கே என்று கேட்டு நல்லமலையை கையில் வெட்டிவிட்டார் என்றும், கணபதி தேவரும், சுரண்டையை சேர்ந்த வெள்ளத்துரையும் தங்களிடமிருந்த அரிவாளால் எனது கணவரின் கழுத்துமற்றும் மார்பில் மாறி மாறி வெட்டிவிட்டதாகவும், சபரிசெல்வம் எனது கணவரின் மார்பிலும், முதுகிலும்கத்தியால் குத்தியதாகவும் அதன் காரணமாக எனது கணவர் இறந்துவிட்டதாகவும் போலீசார் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு எங்களை போலீசார் பிரேதம் கிடந்த மலைப்பகுதிக்கு அழைத்து சென்றார்கள். ரோட்டிலிருந்து 50 அடி தூரத்தில் எனது கணவர் பனியன், ஜட்டியுடன் மல்லாந்த நிலையில் இறந்து கிடந்தார். அவர் அணிந்திருந்த வேட்டியை கிழித்து அவரது கைகளை கட்டியிருந்தார்கள். எனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். எனது கணவரின் புகைப்படத்தை போலீசாரிடம் நான் காட்டினேன். எனது கணவரின் பிரேதத்தின் மீது கழுத்திலும், மார்பிலும் பல்வேறு ரத்தக் காயங்கள் காணப்பட்டன. அதன் பிறகு போலீசார் ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது கணவரின் பிரேதத்தை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு 2 வருடங்கள் கழித்து போலீசார் மரபணு சோதனைக்காக ரத்தப்பரிசோதனை செய்ய தென்காசிக்கு வரவழைத்தார்கள். எனது மாமியார் பரிசோதனைக்காக ரத்தம் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>4, 9,10,11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

28.02.2016 ம் தேதி அன்று காலையில் 07.00 மணியளவில் தேவதானப்பட்டியில் இருந்து கொடைக்கானலுக்கு வேலைவிஷயமாக நல்லமலை எனது கணவரை அழைத்து சென்றார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான்சொல்லியுள்ளேன். 28.02.2016 ம் தேதி எனது கணவர் என்னிடம் செல்போனில் பேசிய விவரத்தையும் நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 02.03.2016 அன்று நல்லமலை எனக்கு போன் செய்து, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவர் சிகிச்சையில் இருப்பதாக சொன்ன விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராஜபாளையம் அருகில்

வந்துகொண்டிருந்தபோது, ஊத்துமலை போலீசார் என்னை தொடர்பு கொண்டதாகவும், எனது கணவருக்கு என்ன நடந்தது என்ற விவரத்தை போலீசார் சொன்னதன் பேரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நல்லமலை ஊத்துமலை காவல்நிலையத்தில் இந்தவழக்கு விஷயமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நல்லமலை கொடுத்ததாக ஒரு புகார் மனுவை ஊத்துமலை போலீசாரே தயார் செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எனது கணவரின் உடல் கிடந்த இடத்திற்கு நான் சென்றதாகவும், எனது கணவரின் பிரேதத்தை நான் அடையாளம் காட்டியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் உடல் கிடந்த இடத்தின் அருகே வைத்து எனது கணவரின் புகைப்படத்தை போலீசாரிடம் ஒப்படைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**(மற்ற எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது)**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi